# சமூக அடிப்படையிலான கிராமிய நீர் வழங்கல் திட்டங்களின் செயற்திறன் - 2010



**செயலாற்றல் மற்றும் சுற்றாடல் கணக்காய்வுப் பிரிவு**

8 ஆவது தொகுதி – பகுதி – III

**2013 செப்தெம்பர்**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களம்**

| உள்ளடக்கம் | | பக்கம் |
|---|---|---|


| | | |
|---|---|---|
| 1. | நிறைவேற்றுப் பொழிப்பு | 04 |
| 2. | அறிமுகம் | 07 |
| 2.1 | சமூக அடிப்படையிலான நீர் வழங்கல் திட்டங்களின் முக்கியத்துவம் | 07 |
| 2.2 | கணக்காய்விற்கான அதிகாரம் | 07 |
| 2.3 | கணக்காய்வின் நோக்கமும் தெரிவு செய்தலுக்கான காரணமும் | 07 |
| 2.4 | கணக்காய்வின் நோக்கெல்லை | 08 |
| 2.5 | கணக்காய்வு அணுகுமுறை, குறிக்கோள்கள், பருமனளவு என்பன | 08 |
| 2.6 | மட்டுப்பாடுகள் | 09 |
| 3. | கணக்காய்வு காண்புகள், சிபார்சுகள், முகவர் பதில் வாசகம் என்பன | 09 |
| 3.1 | சாத்திய வள ஆய்வுகளின் போதாக்குறை | 09 |
| 3.2 | பாதுகாப்பான குடிநீர் கிடைக்காமை | 12 |
| 3.3 | நீர்த்திட்டங்களின் குறைபாடான நிர்மாணம் | 14 |
| 3.4 | நிர்மாணங்களின் குறைந்த செயல்முன்னேற்றம் | 15 |
| 3.5 | வேறுபட்ட வரிகளைப் பயன்படுத்தல் | 16 |
| 3.6 | இலக்குகளை அடைந்துகொள்ளாமை | 17 |
| 3.7 | சாதகமான வருமானமற்ற நீர் வரிகள் | 18 |
| 3.8 | செயற்திட்ட முகாமைத்துவம் | 19 |
| 4. | கணக்காய்வு முடிவுகள் | 21 |
| 5. | பின்னிணைப்பு | |
| அ. | கணக்காய்வு பருமனளவு | 23 |
| ஆ. | தொடர்புபட்ட பொருட்கள் | 24 |
| | பின்னிணைப்பு | 25 - 28 |

பிரதான சுருக்கச் சொற்கள்

-------------------------------------------------

| | | |
|---|---|---|
| • என்டபிள்யூ எஸ் டீ பீ | - | தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை |
| • சீ பி ஓ | - | சமூக அடிப்படையிலான அமைப்பு |
| • பீஎஸ் | - | பிரதேச சபை |
| • ஏ டீ பி | - | ஆசிய அபிவிருத்தி வங்கி |
| • பி எம்யூ | - | செயற்திட்ட முகாமைத்துவ அலகு |
| • ஜி ஒ எஸ் எல் | - | இலங்கை அரசாங்கம் |
| • எம் ஓ யூ | - | புரிந்துணர்வு உடன்படிக்கை |
| • பீ எஸ் யூ | - | செயற்திட்ட ஆதரவு அலகு |
| • ஓ மற்றும் எம் | - | செயற்பாடும் பராமரிப்பும் |
| • ஜி என் டீ | - | கிராம உத்தியோகத்தர் பிரிவு |
| • என் ஆர் டபிள்யூ | - | வருமானமற்ற நீர் |
| • டீ எஸ் | - | பிரதேச செயலகம் |

## 1. நிறைவேற்றுப் பொழிப்பு

--------------------------------

நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் சுத்தமான குடிநீரை வழங்குவது அரசாங்கத்தினதும் உள்ளூராட்சி நிறுவனங்களினதும் சவாலான இலக்காக மாறியுள்ளது. அரசாங்கத்தின் “பத்து ஆண்டுகள் அபிவிருத்தித் திட்டத்தினை” அடைந்துகொள்ளும் வகையில் பல நீர் வழங்கல் திட்டங்களை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஏற்கெனவே அமுல்படுத்திவருகின்றது. இத்திட்டத்திற்கு இணங்க 2009 ஆம் ஆண்டளவில் சனத்தொகையின் 80 சதவீதத்திற்கும், 2013 ஆம் ஆண்டளவில் 85 சதவீதத்திற்கும் 2016 ஆம் ஆண்டளவில் 90 சதவீதத்திற்கும் போதியளவு குடிநீரினை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் கிராமப் பகுதியில் குடிநீர் வழங்குவதனை முகாமை செய்வதில் சமூக அடிப்படையிலான அமைப்புக்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. நீர் வழங்கல் மற்றும் விநியோக முகாமைத்துவத்தில் ஈடுபட்டுள்ள துறைச் செயற்பாட்டாளர்களாக சமூகத்திற்கான தங்களுடைய பொறுப்பையும் அவர்கள் இனங்கண்டுள்ளார்கள்.

தேசிய இலக்குகளை அடைந்து கொள்வதில் தரமான குடிநீரை வழங்குவதனை அபிவிருத்தி செய்வதற்காக சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் பங்களிப்புக்கள் மற்றும் சமூக அடிப்படையிலான நீர் வழங்கல் செயற்திட்டம் தொடர்பாக (ஆசிய அபிவிருத்தி வங்கியின் 4 ஆவது செயற்திட்டம்) யூஎஸ் டொலர் 175.2 மில்லியன் தொகையான குறிப்பிடத்தக்க அளவான பண அளிப்புக்கள் என்பவற்றின் காரணமாக சமூக அடிப்படையிலான நீர் வழங்கல் செயற்திட்டமானது செயலாற்றல் கணக்காய்விற்காகத் தெரிவு செய்யப்பட்டது.

செயற்திட்டமானது தரமான நீரை வழங்குதல் மற்றும் அதனை அதிகரித்தல் என்ற அதனது குறிக்கோள்களை அடைந்துள்ளதா என்பதனை மதிப்பிடுவதே கணக்காய்வின் பிரதான குறிக்கோளாகக் காணப்பட்டது.

செயலாற்றல் கணக்காய்வின் முக்கிய காண்புகள் பின்வருவனவாகும்.

(அ) சாத்திய வள ஆய்வுகளின் போதாக்குறைவும் நிலையான நீர்மூலங்களை இனங்காணாமையும்.

(ஆ) தரம் குறைந்த நீர் மற்றும் சுத்திகரிக்காது நீரினை வழங்குதல்.

(இ) நீர் வழங்கல் திட்டங்களுக்காக பொருத்தமற்ற நிர்மாணங்களும் சிறந்த உட்கட்டமைப்பு வசதிகள் இன்மையும்.

(ஈ) நிர்மாணித்தலில் தாமதம்

(உ) வரிச் செயற்திறனின்மைகள் மற்றும் சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் வரிகளுக்கும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வரிகளுக்கும் இடையிலான முரண்கள்.

(ஊ) இலக்குகளை அடைந்துகொள்ளாமை

(எ) வருமானமற்ற நீரின் நியாயமான வரி விகிதங்கள்

(ஏ) சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் நீண்டகால செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கு பொருத்தமான ஒழுங்குகள் இல்லாமை.

சிபார்சுகளின் பொழிப்பு பின்வருமாறுள்ளன.

(அ) செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு முன்னர் பொருத்தமான உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் சாத்திய வள ஆய்வுகள் அத்துடன் நீர் ஊற்றுக்கள் காணப்படவில்லையாயின் வழமையான நீர் விநியோகக் குழாய்களை இலக்கிடப்பட்ட நலன்பெறுனர்கள் வரை விஸ்தரித்தல் வேண்டும். மேலும் நீர் வளங்களைப் பேணுவதனை உறுதிப்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு பொறுப்புக்கள் ஒப்படைக்கப்படுவதுடன் நீர் வளங்களின் நிலையான தன்மை தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் வேண்டும்.

(ஆ) சாத்தியமான அளவிற்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதன் மூலம் தேசிய நீர்த் தர நியமங்களுடன் இணங்கி நடத்தல் மற்றும் பொறுப்பான உரிய உத்தியோகத்தர்களுக்கும் சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்கும் அறிவூட்டுவதல் அவசியமாக உள்ளது. மேலும் எதிர்கால அபிவிருத்தி வேலைகளுக்கான ஒரு வேண்டுதலாக உள்ளடக்கும் வகையில் நீரைச் சுத்திகரிக்கும் கண்டிப்பான வேண்டுதல் தொடக்க திட்டமிடல் ஆவணங்களில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

(இ) சம்பந்தப்பட்ட நீர்த் திட்டங்களைத் திட்டமிட்டு மேற்பார்வை செய்வதுடன் சிக்கல்கள் பற்றி சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு அறிவூட்டுதல் வேண்டும் அத்துடன் நீர்த் தாங்கிகளை நிர்மாணிக்கும் துறையில் தகைமைபெற்றவர்களை வாடகைக்கு அமர்த்துதல் வேண்டும்.

(ஈ) செயற்திட்ட நடவடிக்கைகளை முறைப்படி திட்டமிட்டு, ஒழுங்குபடுத்தி மற்றும் ஒருங்கிணைப்பதனூடாகவும் ஒவ்வொரு வேலைக்குமாக தனியான நேர அட்டவணைகளை நிர்ணயிப்பதன் மூலமும் நீர்த்திட்ட செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

(உ) உள்ளபடியான கிரயத்தினை கவனத்தில் கொண்டு அரசாங்கம் அல்லது நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கொள்கைகளுக்கு அமைவாக அனைத்து வரித் திருத்தங்களையும் அங்கீகரித்து அமுல்படுத்துவதற்கு சுதந்திரமான ஒழுங்குபடுத்தல் அமைப்பினைத் தாபித்தல் வேண்டும்.

(ஊ) செயற்திட்டத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதனை காலத்துக்கு காலம் கண்காணிப்பதுடன் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு முன்னர் தேவைப்பாட்டு மதிப்பீட்டினையும் மேற்கொள்தல் வேண்டும்.

(எ) வருமானமற்ற நீரினை சாத்தியமான அளவில் குறைப்பதற்கு திட்டங்களைத் தயாரிப்பதுடன் நீர் வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தும் வகையில் மேலும் இப்போக்கினைப் பேணுதல் வேண்டும்.

(ஏ) (i) சமூக அடிப்படையிலான அமைப்புக்களை மேற்பார்வை செய்வதற்கு ஒரு சுதந்திரமான அலகினைத் தாபித்தல் வேண்டும்.

(ii) சமூகத்துடன் ஒத்திசைவாகச் செயற்படக்கூடிய நபர்கள் உத்தியோகத்தர்களாக நியமிக்கப்படும் வகையில் சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்கு உத்தியோகத்தர்களைத் தெரிவுசெய்யும் முறையினை அறிமுகப்படுத்துதல் வேண்டும்.

(iii) நிதிசார் நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டு அமுல்படுத்தப்படுதல் வேண்டும்.

(iv) வருடாந்தம் நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதற்கும் நிதிக்கூற்றுக்களை கணக்காய்வு செய்வதற்கும் சிபார்சு செய்தல்.

## 2. அறிமுகம்

--------------

### 2.1 சமூக அடிப்படையிலான நீர் வழங்கல் திட்டங்கள் எனும் எண்ணக்கருவின் முக்கியத்துவம்

சமூக அடிப்படையிலான நீர் வழங்கல் மற்றும் சுகாதார நிகழ்ச்சித்திட்டங்களில் சமூக அடிப்படையிலான அமைப்புக்களானவை (சீபீஓ) மிக முக்கியத்துவம் வாய்ந்த கூறாகும். சமூக அடிப்படையிலான நிறுவனங்கள் சமூகத்துடன் இணைந்து செயற்படுகின்றது. இது செயற்திட்ட அமுலாக்கலின் அனைத்து கட்டங்களிலும் தீர்மானம் எடுப்பதில் பங்குபற்றுவதற்கு வசதியளித்து சமூகத்தை ஊக்கப்படுத்துகின்றது. இது சமூகத்தை சிறப்பாகப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டியதுடன் முழுமையான அர்ப்பணிப்புள்ள, சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, நிதி வசதியுள்ள மற்றும் போதியளவு நுட்ப அறிவுள்ள அங்கத்தவர்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் (ஜிஎன்டீ) செயற்திட்டத்தினை அமுலாக்குவதற்கான அனைத்து பொறுப்புக்களையும் சமூக அடிப்படையிலான அமைப்புக்கள் பொறுப்பேற்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. தெரிவு செய்யப்பட்ட சமூகங்களிலுள்ள நலன்பெறுகின்ற வீட்டு உடமையாளர்கள் தங்களின் சமூகங்களில் நீர் வழங்கல் திட்டங்கள், மழைநீர் தாங்கிகள், கிணறுகள், குழாய்க் கிணறுகள், கழிவறை வசதிகள் என்பவற்றை திட்டமிடுதல், வடிவமைத்தல் மற்றும் நிர்மாணித்தலில் கூட்டாகச் செயற்படுதல் வேண்டும். செயற்திட்டத்தின் ரூபா 175.2 மில்லியன் தொகையான மொத்த முதலீடு நன்கொடையாளர் உதவியினூடாக வழங்கப்படுகின்றது.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக கிராமப் பிரதேசங்களில் குடிநீரினை வழங்குவதில் சுறுசுறுப்பாக ஈடுபட்டுள்ள பிரதான நிறுவனங்கள் பிரதேச சபைகளாகும் (பீஎஸ்). நீர் விநியோகத்தை திட்டமிடுதல் மற்றும் நிர்மாணிப்பதில் பிரதேச சபைகளின் ஈடுபாடானது பல்வேறு காரணங்களால் மட்டுப்படுத்தப்படுகின்றது.

### 2.2 இலங்கையில் கணக்காய்விற்கான அதிகாரம்

-----------------------------------------------------------

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரைக்கு இணங்க கணக்காய்வாளர் தலைமை அதிபதி கணக்காய்வினை மேற்கொள்வதுடன் பொதுத்துறை நிறுவனங்களின் செயலாற்றல் கணக்காய்வினைப் பொறுப்பேற்று சுதந்திரமான அறிக்கையினைச் சமர்ப்பித்து பாராளுமன்றம், அரசாங்கம், சமூகம் என்பவற்றிற்கு ஆலோசனை தெரிவிக்கின்றார். பொதுத்துறை நிர்வாகத்தினையும் கணக்களிப் பொறுப்பினையும் மேம்படுத்துவதே இலக்காகும். செயலாற்றல் கணக்காய்விற்குப் பிரயோகிக்கக் கூடிய நியமங்களுக்கு இணங்க கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

## 2.3 கணக்காய்வின் நோக்கமும் தெரிவு செய்தலுக்கான காரணமும்

செயலாற்றல் கணக்காய்வின் நோக்கம் பின்வருவனவற்றை மதிப்பிடுவதாகும்.

தேசிய இலக்குகளை அடைந்துகொள்வதில் நீரைப் பெற்றுக்கொள்வதனையும் அதன் தரத்தினையும் அபிவிருத்தி செய்வதற்கும் சமூக அடிப்படையிலான நீர் வழங்கல் திட்டங்களில் யூஎஸ் டொலர் 175.2 மில்லியனை முதலீடு செய்வதற்குமான சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் முக்கியத்துவம் காரணமாக சமூக அடிப்படையிலான நீர்வழங்கல் திட்டங்களின் செயற்திட்டம் செயலாற்றல் கணக்காய்விற்காகச் தெரிவுசெய்யப்பட்டது.

## 2.4 கணக்காய்வின் நோக்கெல்லை

அ. சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் கீழ் பொலன்னறுவை மாவட்டத்தில் சமூக அடிப்படையிலான கிராமிய நீர்வழங்கல் திட்டங்கள் தொடர்பான இனங்காணப்பட்ட குறிக்கோள்களை மாத்திரம் செயலாற்றல் கணக்காய்வு உள்ளடக்குகின்றது.

ஆ. இலங்கை அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க செயலாற்றல் கணக்காய்வு நடாத்தப்பட்டதுடன் இது நாங்கள் அவசியமானது எனக் கருதும் அவ்வாறான செவ்வையினையும் உள்ளடக்கும். மேற்கூறப்பட்ட குறிக்கோள்களை அடைந்து கொள்ளமுடியுமான பரப்பினை நிர்ணயிப்பதற்கான அடிப்படையாக தேவையான அளவிற்கு நிறுவனங்களின் (தேசிய நீர்வழங்கல், வடிகாலமைப்புச் சபை மற்றும் சமூக அடிப்படையிலான அமைப்புக்கள்) புரிந்துணர்வினையும் அவற்றின் செயற்பாடுகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளையும் நாங்கள் பெற்றுக்கொண்டோம்.

இ. செயலாற்றல் கணக்காய்வின் பரப்பெல்லையானது இந்த நோக்கத்திற்கு பெற்றுக்கொள்ளக் கூடியதான காலம் மற்றும் மனித வளங்களின் அடிப்படையில் மாதிரி எடுத்தல் நடைமுறைக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது

## 2.5 கணக்காய்வு அணுகுமுறை, குறிக்கோள்கள், பருமனளவு என்பன

அ. இதுவே தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் முதலாவது செயலாற்றல் கணக்காய்வாகும். இது செயலாற்றல் கணக்காய்வில் பயிற்றுவிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களால் முன்னோடி கணக்காய்வு ஒன்றாகப் பொறுப்பேற்கப்பட்டிருந்தது.

ஆ. குடிநீர் வழங்கல் போதியதாக இருந்ததா என்பதனையும் எதிர்பார்க்கப்பட்டவாறு தர வேண்டுதல்களை உரிய பிரதேசத்திற்குள் நிறைவேற்றியுள்ளதா என்பதனையும் மதிப்பீடு செய்வதே கணக்காய்வின் பிரதான குறிக்கோளாக இருந்தது.

இ. சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் கட்டமைப்பானது குறைந்த கிரயத்தில் சுத்தமான குடிநீரினைத் தயார்படுத்துவதனையும் நியாயமான விலையில் பாவனையாளர்களுக்கு நீரினை வழங்குவதனையும் சாத்தியமாக்கியது என்பதனை உறுதிப்படுத்துதல்.

ஈ. தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்ட சுத்தமான குடிநீரின் அளவானது சம்பந்தப்பட்ட மக்களின் எதிர்காலத் தேவைகளை நிறைவேற்றுவதற்குப் போதியவையாக இருக்குமா என்பதனையும் மதிப்பீடு செய்வதற்கு.

உ. தற்போதுள்ள கட்டுப்பாடுகள், நடைமுறைகள், தாபன கட்டமைப்புக்கள் என்பவற்றுக்குள் சமூகத்திற்கான நீரினை வழங்குவதனைத் தொடர்வதற்கான சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் இயலளவினை நிர்ணயிப்பதற்கு.

ஊ. சுற்றாடல் மற்றும் சமூகம் மீது சீபீஓ இன் நீர் வழங்கல் திட்டத்தின் தாக்கத்தினை மதிப்பீடு செய்வதற்கு. (சுற்றாடல் மற்றும் சமூக தாக்கம்)

கணக்காய்வு அணுகுமுறையானது வெளிக்களப் பரிசோதனைகள் மற்றும் பல்வேறு சுதந்திரமான மூலங்கள், நலன்பெறுனர்களிடமிருந்து கேள்விக்கொத்துக்களைப் பூர்த்தி செய்தல், ஏனைய தொடர்புபட்ட ஆவணங்களை மீளாய்வு செய்தல், செயற்திட்ட மற்றும் சீபீஓ உத்தியோகத்தர்களை நேர்காணல் என்பவற்றின் மூலம் தரவுகளை சேகரித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தலாக இருந்தது.

கணக்காய்வு பருமனளவு (பின்னிணைப்பு – ஏ)

## 2.6 வரையறைகள்

(அ) சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் கீழ் பொலனறுவை மாவட்டத்தில் சமூக அடிப்படையிலான கிராமிய நீர் வழங்கல் திட்டம் தொடர்பான இனங்காணப்பட்ட குறிக்கோள்களை மாத்திரம் செயலாற்றல் கணக்காய்வு உள்ளடக்குகின்றது. முப்பத்து நான்கு நலன் பெறுனர்கள் நேர்காணப்பட்டார்கள்.

(ஆ) செயலாற்றல் கணக்காய்வின் பரப்பானது இந்த நோக்கத்திற்காகக் கிடைக்கக்கூடிய காலம் மற்றும் மனித வளங்களின் அடிப்படையில் மாதிரி எடுத்தல் நடைமுறைக்கு வரையறுக்கப்பட்டிருந்தது.

## 3. கணக்காய்வு காண்புகள், சிபார்சுகள், முகவர் பதில்வாசகம் என்பன

-----------------------------------------------------------------------------------------------------------

### 3.1 சாத்தியவள ஆய்வு போதாமை

--------------------------------------------------------------

**அவதானிப்பு**

--------------------

செயற்திட்டத்தின் 1 ஆவது கட்டத்தின் கீழ் நான்கு பிரதேச சபைகளின் கீழ் வரும் பொலன்னறுவை மாவட்டத்தில் செயற்படுகின்ற சமூக அடிப்படையிலான அமைப்புக்கள் தொடர்பாக பிரச்சினைகள் எழுந்துள்ளன. இது சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் பயனுறுதி மற்றும் செயற்திறனை பாரிய அளவில் மட்டுப்படுத்தியுள்ளது. ஒவ்வொரு செயற்திட்டம் தொடர்பாக வெளிக்கள ஆய்வுகளும் நடாத்தப்பட்டுள்ளதுடன் செயற்திட்டங்களின் அமுலாக்கலை அறிக்கைகள் சிபார்சு செய்துள்ளன. எவ்வாறாயினும் கணக்காய்வின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

28 செயற்திட்டங்கள் கொண்ட மாதிரியின் 20 செயற்திட்டங்களில் 11 செயற்திட்டங்களின் அல்லது 55 சதவீதத்தின் பெறுபேறுகளானது நிலையான நீர் வளங்கள் காணப்படாமையின் காரணமாக எதிர்பார்த்தவைகளைவிட குறைவாகக் காணப்பட்டது. (பின்னிணைப்பு – 01 இனைப் பாக்கவும்)

மேலதிக நீர் வளங்களைக் காண்பதற்கு 09 குழாய்க் கிணறுகளை (துளையிடுதல்) நிர்மாணிப்பது தொடர்பாக ரூபா 3,002,518 செலவு செய்யப்பட்டிருந்தது. இதில் 3 குழாய்க் கணறுகள் அல்லது $33^1/_3$ சதவீதமானவை வெற்றியளித்திருக்கவில்லை. அக்குழாய்க் கிணறுகளை தற்போதுள்ள குழாய் வழிகளுடன் இணைப்பது தொடர்பாக மேலதிக செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

செயற்திட்டம் மீது ரூபா 1,452,852 செலவு செய்யப்பட்டதன் பின்னரும் சமூக அடிப்படையிலான அமைப்புக்களால் பணமற்ற ஊழியப் பங்களிப்புக்கள் செய்யப்பட்டதன் பின்னரும் குறைபாடான சாத்திய வள ஆய்வின் காரணமாக ஒரு நீர் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

நீர் இல்லாமையின் காரணமாக ஏனைய செயற்திட்டங்களால் கைவிடப்பட்ட அதே இடங்களில் கிணறுகள் தோண்டப்பட்டிருந்தன.

ஒருங்கிணைப்பு இல்லாமையின் காரணமாக பல்வேறு செயற்திட்டங்களால் கிராமங்களில் நீர் விநியோகத் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.



**வெளிப்பாடு**

---------------

எங்களுடைய பயணத்தின் போது அவதானிக்கப்பட்டவாறு நலன்பெறுனர்களுக்கு நீர் விநியோகம் வழங்கப்பட்டிருக்காததனால் மக்கள் செயற்திட்டங்கள் மீது வைத்த நம்பிக்கையானது இழக்கப்பட்டிருந்தது. ஆகவே சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் நிலைத்திருக்கும் தன்மையானது கேள்விக்குறியாக உள்ளதுடன் பிரதேசத்தின் நில நிலைமையினை ஆய்வு செய்யாது இடங்களைத் தெரிவுசெய்வதிலுள்ள செயற்திறனின்மை காரணமாக முழுச் செலவும் சிக்கனமற்ற செலவாக இருக்கும்.

**சிபார்சுகள்**

-------------------

செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்ற இலக்கிடப்பட்ட பிரதேசங்களின் நில நிலைமைகளுடன் பழக்கப்பட்ட உத்தியோகத்தர்களால் சாத்திய வள ஆய்வினை மேற்கொள்வதற்கு சிபார்சு செய்யப்படுவதுடன் பெற்றுக்கொள்ளக்கூடிய மூலங்களிலிருந்து நீரை வழங்கக்கூடிய பிரதேசங்களுக்காக மாத்திரம் குழாய்கள் அமைக்கப்படுதல் வேண்டும். மேலும் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட வேண்டியதுடன் நீர் வளங்களை பேணிப்பாதுகாப்பதற்காக நீர் வளங்களின் நிலைத்திருக்கும் தன்மை தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

**முகவராண்மையின் பதில் வாசகம்**

------------------------------------------------------

நீர் விநியோக விருப்பத்தெரிவானது (குழாய்த் திட்டங்கள் அல்லது குறித்த இடத்தின் வளம்) சமூக அடிப்படையிலான அமைப்புக்களால் தெரிவுசெய்யப்பட்டது. சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் வேண்டுதலின் அடிப்படையில் சாத்திய வள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

சாத்திய வள ஆய்வு அடிப்படையிலான தொழில்நுட்ப பிரேரணைகளானது பிராந்திய உதவியளித்தல் நிலையத்தின் உதவிப் பொது முகாமையாளரைத் தலைவராகக் கொண்ட செயற்திட்ட மதிப்பீட்டுக் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டு செயற்திட்ட மதிப்பீட்டுக் குழுவின் அங்கீகாரத்தின் பின்னரே அமுல்படுத்தப்பட்டது.

(அ) இந்த நீர்வழங்கல் திட்டங்களுக்கான மூலங்களானது குழாய்க் கிணறுகள் அல்லது கிணறுகளாக உள்ளன. மூலவளங்களிலிருந்து பாதுகாப்பாக எடுக்கக்கூடிய அளவும் நீர் வளங்களின் தரமும் மூலவளங்களைத் தெரிவு செய்யும் போது உறுதிப்படுத்தப்பட்டன. (அதாவது விளைவுப் பரிசோதனை மூலமும் நீரின் தரப் பரிசோதனையின் மூலமும்)

எனினும் நீர் வளங்களில் உருவாகிய அடுத்த பிரச்சினைகள் மேலதிக நீர்வளங்களை வழங்குவதன் மூலம் அல்லது சுத்திகரிப்பு விருப்பத்தெரிவின் மூலம் தீர்த்துவைக்கப்பட்டிருந்தன.

நிதன்வல, இஹலவெவ, இஹல எல்லவெவ, ரத்மல்தன்ன, போட்ட எனும் இடங்களில் அமுல்படுத்தப்பட்ட நீர் வழங்கல் திட்டங்களுக்காக மேலதிக நீர் மூலங்களும் சுத்திகரிப்பு விருப்பத்தெரிவுகளும் வழங்கப்பட்டிருந்தன.

நெலும்வெவ, மெனிக்வெல, பொறவெவ எனும் இடங்களில் அமுல்படுத்தப்பட்ட நீர் வழங்கல் திட்டங்களுக்காக மேலதிக நீர் மூலங்கள் (குழாய்க்கிணறுகள்) வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) நீர் மண்ணியல் ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு குழாய்க் கிணறுகளின் அமைவிடங்கள் தீர்மானிக்கப்பட்ட போதிலும் அளவு மற்றும் தர விடயங்களின் காரணமாக தோண்டப்பட்ட சில குழாய்க் கிணறுகள் கைவிடப்பட்டிருந்தன.

(இ) கைவிடப்பட்ட திட்டங்களுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட கிணறுகளின் பலன் பெறுதலானது தற்பொழுது குறைவடைந்துள்ளது. மாற்று மூலவளங்களைக் காண்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையும் வெற்றியளிக்கவில்லை.

(ஈ) ஏனைய செயற்திட்டங்களால் கைவிடப்பட்ட கிராமங்களில் சிலவற்றினை செயற்திட்டம் தெரிவுசெய்திருந்த போதிலும் மூல வளங்களின் அமைவிடமானது அச்செயற்திட்டங்களால் தெரிவுசெய்யப்பட்ட அமைவிடங்களிலிருந்து வேறுபட்டிருந்தது.

(உ) செயற்திட்டத்தினை அமுல்படுத்துவற்கான கிராம உத்தியோகத்தர் பிரிவுகளானவை பிரதேச சபை ஒருங்கிணைப்பு குழுவின் (பீஎஸ்சீசீ) அங்கீகாரத்துடன் செயற்திட்ட வழிகாட்டிகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டிருந்தன.

## 3.2 பாதுகாப்பான குடிநீர் பெற்றுக்கொள்ளப்படாமை

### அவதானிப்பு

தேசிய நீர்க் கொள்கையின் பிரகாரம் நலன்பெறுனர்களுக்கு தரமான குடிநீர் வழங்கப்படுதல் வேண்டும். அத்துடன் நீர் மாதிரிப் பரிசோதனையானது காலத்திற்குக் காலம் எழுமாறாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும். ஆனால் எங்களுடைய மாதிரியில் பல செயற்திட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் திருப்தியற்ற போக்குகள் காணப்பட்டன.

(அ) 04 நீர்த்திட்டங்களிலிருந்து 676 குடும்பங்களுக்கு அதாவது 4050 நலன்பெறுனர்களுக்கு சுத்திகரிக்கப்படாத நீர் வழங்குதல்.

(ஆ) சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பரிசோதனை அறிக்கை மற்றும் சமூக அங்கத்தவர்களால் விடுவிக்கப்பட்ட கூற்றுக்களின் பிரகாரம் 09 நீர்த்திட்டங்களிலுள்ள சுத்திகரிக்கப்பட்ட நீரும் குடிக்கக்கூடிய நிலையில் காணப்படவில்லை என்பதனை நிரூபித்துள்ளது. (பின்னிணைப்பு – 02 ஐப் பார்க்கவும்)

(இ) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நீர்க் கொள்கையினால் வேண்டப்பட்டவாறு ஆகக் குறைந்தது ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் ஒரு தடவையாவது சுத்திகரிக்கப்பட்ட நீர் பரீட்சிக்கப்படாத சூழ்நிலை காணப்பட்டது.



**வெளிப்பாடுகள்**

-----------------------

குடிப்பதற்குப் பொருத்தமற்ற அவ்வாறான நீரின் விநியோகமானது சமூகத்திற்கு பாரிய சுகாதாரப் பிரச்சினைகளை ஏற்படுத்தலாம் மேலும் சமூகத்தின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதற்குப் பதிலாக பொருளாதாரத்திற்கு மேலும் சுமைகளை ஏற்படுத்தும். வழங்கப்பட்ட நீரானது குடிப்பதனை விட ஏனைய நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதானது செயற்திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோள்களுக்கு முரணானவையாகும்.

**சிபார்சுகள்**

-----------------

தேசிய நீர்த்தர நியமங்களுடன் இணங்கி நடப்பதற்கும், சம்பந்தப்பட்ட பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கும் சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் முக்கிய நபர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதன் மூலம் அறிவூட்டுவதற்கும், பிராந்திய உத்தியோகத்தர்களால் ஒழுங்காக பரிசோதனைகளை மேற்கொள்வதற்கும் சிபார்சு செய்யப்பட்டது. மேலும் எதிர்கால அபிவிருத்தி வேலைகளை விரிவாக்கும் வகையில்

நீரைச் சுத்திகரிப்பதற்கான கண்டிப்பான வேண்டுதலானது தொடக்க திட்டமிடல் ஆவணங்களில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

**முகவராண்மையின் பதில் வாசகம்**

(அ) ‘‘நிடன்வல, இஹல எல்லேவெவ, ரத்மல்தென்ன, குசும்பொக்குன என்பவற்றிற்கு மேலதிக மூலவளங்களை இனங்காண்பதுடன் சேர்த்து சுத்திகரிப்பு விருப்பத் தெரிவுகள் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை நீரைப் பரீட்சிக்குமாறு சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்கு செயற்திட்டம் ஆலோசனை தெரிவித்திருந்தது. மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை நீர் வழங்கல் திட்டங்களின் நீர் மாதிரிகளைப் பரீட்சிப்பதற்காக தேவையான கணிப்பிடல் கருவிகளை கிராமிய நீர் வழங்கல் பிரிவு வழங்குகின்றது.’’

## 3.3 நீர்த் திட்டங்களின் குறைபாடான நிர்மாணங்கள்

**அவதானிப்பு**

கிராம மக்களுக்கும் பிரதேசத்திலுள்ள ஏனைய அமைப்புக்களுக்கும் சிறந்த நீர் வசதிகளை வழங்குவதற்காக சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் பங்குபற்றலுடன் நீர் வழங்கல் திட்டங்களை செயற்திட்டம் நிர்மாணித்திருந்தது. இந்நீர்த் திட்டங்களின் நிர்மாண நடவடிக்கைகள் தொடர்பாக மேற்கொண்ட புலனாய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

அ. குறைபாடான நிர்மாணத்தின் காரணமாக நீர் இறைக்கும் நிலையங்களை மீள் நிர்மாணிப்பதற்கு திம்புலாகல பிரதேச சபைப் பிரிவில் 06 நீர்த் திட்டங்களின் மீது ரூபா 2,734,285 செலவு செய்யப்பட்டிருந்தது.

ஆ. மின்சார விநியோகம், அலுவலக வசதிகள், தொகை மின்மானிகளைப் பொருத்துதல், வெளிப்பாய்ச்சல் அடைப்புத் தடுப்பு, வாயில்கதவு அடைப்புத் தடுப்பு, நீர்த்தாங்கி மற்றும் கிணறுகளுக்கான பாதுகாப்பு பொருத்திகள், பனெல் போட் குறிகாட்டிகள் போன்றவாறான முறையான உட்கட்டமைப்பு வசதிகள் 10 நீர்த் திட்டங்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

இ. இரண்டு நீர்த் திட்டங்களில் வேண்டப்பட்ட எண்ணிக்கையாள மோட்டார்கள் பொருத்தப்பட்டிருக்கவில்லை என்பதுவும் 02 மேல் நீர்த்தாங்கிகளில் நீர்க் கசிவுகள் காணப்பட்டன என்பதுவும் அவதானிக்கப்பட்டது.

**வெளிப்பாடுகள்**

-----------------------

அ. செயற்திட்ட வேலைகள் முறையாக நிர்மாணிக்கப்பட்டிருக்காததனாலும் சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்கு நீர் விநியோகத் திட்டங்களை கையளிக்காததனாலும் நீர் வழங்கல் திட்டங்களின் முழுமையான நலன்களை அனுபவிக்கும் நிலையில் நலன் பெறுனர்கள் இருக்கவில்லை.

ஆ. திட்டமிடல் இல்லாமை, செயல்முன்னேற்றத்தையும் விடயங்களையும் மீளாய்வு செய்வதற்கு மாதாந்த செயல்முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடத்தாமை என்பவற்றின் காரணமாக இடம்பெற்ற மேலதிகக் கிரயங்கள் செயற்திட்டத்திற்கான சிக்கனமற்ற செலவாக இருக்கும்.

**சிபார்சுகள்**

------------------

அமுல்படுத்தப்பட்ட ஒவ்வொரு நீர்த்திட்டமும் முழுமையான சாத்தியவள ஆய்வு மற்றும் நிர்மாணத்தின் போது ஆக்கபூர்வமான மேற்பார்வையின் பின்னர் முறைப்படியாக திட்டமிடப்பட வேண்டுமென சிபார்சு செய்யப்படுகின்றது. ஒப்பந்தக்காரர்களின் தெரிவானது தகுதிவாய்ந்த மற்றும் அனுபவமுள்ள நிறுவனங்களுக்கு மட்டுப்படுத்தப்பட வேண்டியதுடன் வேலையானது நிர்மாணத்தின் போது ஆக்கபூர்வமாகவும் ஒழுங்குமுறையாகவும் மேற்பார்வை செய்யப்படுதல் வேண்டும்.

**முகவராண்மையின் பதில் வாசகம்**

------------------------------------------------------

(அ) ''திம்புலாகல பிரதேச சபைப் பிரிவிலுள்ள 06 திட்டங்களில் நீர் இறைக்கும் நிலையங்கள் மேலதிகமாக ஒரு நீர் இறைக்கும் பம்பியினைப் பொருத்துவதற்காக விஸ்தரிக்கப்பட்டது.

(ஆ) இலங்கை மின்சார சபையினால் மின்மாற்றிகளைப் பொருத்துவதிலுள்ள தாமதத்தின் காரணமாக திட்டங்களுக்கான மின்சார வழங்கல்கள் தாமதித்திருந்தன. திட்டங்களில் குழாய் அமைக்கும் வேலைகள் சீபீஓ ஆல் செய்யப்பட்டன. குழாய்கள் அமைத்ததன் பின்னரும் திட்டங்களைத் தொடங்குவதற்கு முன்னரும் பொதுவாக வெளிப்பாய்ச்சல் அடைப்புத் தடுப்பு, வாயில் கதவு அடைப்புத் தடுப்புகள், பாதுகாப்பு பொருத்திகள் முதலியன பொருத்தப்பட்டன. மெனிக்வெவ, போரவெவ மண்டலகிரிய என்பவற்றில் அமுல்படுத்தப்பட்ட நீர் வழங்கல் திட்டமானது அறிக்கையில் தர விடயங்களை அல்லாது கணிய விடயங்களையே குறிப்பிட்டிருந்தது.

(இ) சம்பந்தப்பட்ட திட்டங்களில் நீர் இறைக்கும் பம்பிகள் பொருத்தப்பட்டிருந்ததுடன் நீர்க் கசிவுகளும் திருத்தம் செய்யப்பட்டன.''

## 3.4 நிர்மாணத்தின் குறைவான செயல்முன்னேற்றம்

---

**அவதானிப்பு**

---

செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டங்கள் 18 மாதங்களுக்குள் பூர்த்திசெய்யப்பட்டு சமூக அடிப்படையிலான அமைப்புக்களிடம் கையளிக்கப்படுதல் வேண்டும். 06 செயற்திட்டங்கள் அல்லது மாதிரியின் 21 சதவீதமானவை இலக்கிடப்பட்ட காலத்திற்குள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மேலும் பூர்த்திசெய்யப்பட்ட செயற்திட்டங்கள் 36 மாத காலமாக செயற்பாட்டிற்கு விடப்பட்டிருந்தன.

ஒவ்வொரு வேலைத்தளத்தினதும் பௌதீகத் தன்மையினை ஆய்வு செய்யாது அனைத்து செயற்திட்டங்களுக்குமாக ஒரு பொதுவான செயற்திட்ட காலம் கடைப்பிடிக்கப்பட்டிருந்ததனால் நிர்மாணத்தில் நீண்ட கால தாமதத்தனை விளைவித்துள்ளது.

**வெளிப்பாடுகள்**

---

மேற்கூறிய காரணத்தினாலும் பற்றாக்குறையான செயல்முன்னேற்ற மீளாய்வினாலும் நலன்பெறுனர்கள் திட்டத்தின் மீது தங்களுடைய நம்பிக்கையை இழந்துள்ளார்கள்.

**சிபார்சுகள்**

---

செயற்திட்ட நடவடிக்கைகளை முறையாகத் திட்டமிடல், ஒழுங்குபடுத்துதல், ஒருங்கிணைத்தல் என்பவற்றை அமுல்படுத்துவதன் மூலம் உரிய வேளையில் நீர்த்திட்ட செயற்திட்டங்களைப் பூர்த்திசெய்வதற்கும் அத்துடன் செய்த வேலைகளின் தரத்தினை உள்ளடக்கி நிர்மாணங்களின் அமைவிடம் மற்றும் ஒழுங்கான செயல்முன்னேற்ற மீளாய்வு என்பவற்றின் அடிப்படையில் ஒவ்வொரு திட்டத்திற்குமாக தனியான கால அட்டவணையினை நிர்ணயிப்பதற்கும் சிபார்சு செய்யப்படுகின்றது.

**முகவரின் பதில் வாசகம்**

---

‘‘செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு செயற்திட்டமும் 18 மாதங்களுக்குள் பூர்த்திசெய்யப்பட்டு சமூக அடிப்படையிலான அமைப்புக்களிடம் கையளிக்கப்படுதல் வேண்டும். ஆசிய அபிவிருத்தி வங்கியின் 4 ஆவது செயற்திட்டத்தில் நீர் வழங்கல் திட்டங்களின் நிர்மாணமானது சமூக அடிப்படையிலான அமைப்புக்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. திட்டங்கள் மீதான நிர்மாண வேலைகள் பின்வரும் ஒன்று அல்லது மேற்பட்ட காரணங்களினால் உரிய காலத்தில் பூர்த்திசெய்ய முடியாதிருந்தது.

(அ) சமூகத்தினால் சமூக பங்களிப்புக்கள் உரிய வேளைக்கு வழங்கப்படாமை (காசு மற்றும் ஊழியம்)

(ஆ) மின்சார இணைப்புகளைப் பெற்றுக்கொள்வதில் தாமதம்

(இ) விவசாய காலத்தின் போது நிர்மாண வேலைகள் தடைப்படுதல் (சிறுபோகம் மற்றும் பெரும்போகம்)

(ஈ) பாதகமான காலநிலை''

## 3.5 வேறுபட்ட வரிகளைப் பயன்படுத்தல்

---

**அவதானிப்புக்கள்**

---

அ. ஒரே செயற்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட வெவ்வேறு நீர் வழங்கல் திட்டங்களில் நலன்பெறுனர்களிடமிருந்து வேறுபட்ட வரிகள் அறவிடப்பட்டிருந்தன.

ஆ. தேசிய நீர்வவழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் சுத்திகரிக்கப்பட்ட நீர் விகிதங்களுடன் ஒப்பிடுகையில் நலன்பெறுனர்களின் படி இத்திட்டங்களில் முரண்கள் அவதானிக்கப்பட்டன. (பின்னிணைப்பு 03 ஐ பார்க்கவும்)

**வெளிப்பாடுகள்**

---

அ. தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நீர் வரிகளை மிகைத்த நீர் வரிகளை கிராமத்தவர்கள் நீர்த் தொடர்புகளைப் பெற்றுக்கொள்வதற்குச் செலுத்த வேண்டி ஏற்பட்டது.

ஆ. வரிகளின் வேறுபாடானது நலன்பெறுனர்களின் எதிர்ப்புக்களை விளைவிக்கலாம்.

**சிபார்சுகள்**

---

உள்ளபடியான கிரயத்தினைக் கருத்தில்கொண்டு அரசாங்கம் அல்லது நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு ஒத்ததாக அனைத்து திருத்தங்களுக்கும் பொறுப்பாக இருப்பதற்கு ஒரு சுதந்திரமான ஒழுங்குபடுத்துதல் அமைப்பினைத் தாபிப்பதற்கு சிபார்சு செய்யப்படுகின்றது. வரி தொடர்பான விடயங்கள் தேசிய கொள்கைகளுக்குச் சமாந்தரமாக அமுல்படுத்தப்படுதல் வேண்டும்.

**முகவராண்மையின் பதில்வாசகம்**

---

ஒரு திட்டத்தின் வரியானது ஒவ்வொரு சீபீஓ திட்டத்தினாலும் (செயற்பாட்டு மற்றும் பராமரிப்புக் கிரயம் மற்றும் அதற்கான மீளமைத்தல் கிரயத்தின் அடிப்படையில்) தீர்மானிக்கப்படுகின்றது. ஆகவே திட்டங்களின் வரிகளானது ஒரு திட்டத்திலிருந்து மற்றொரு திட்டத்திற்கு வேறுபடலாம். இது தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் விலைகளுக்குச் சமமாக இருக்கவேண்டிய தேவையில்லை.

## 3.6 இலக்குகளை அடைந்து கொள்ளாமை

---

**அவதானிப்புக்கள்**

---

குறிப்பிடத்தக்க அளவான செயற்திட்ட வேலைகளைப் பூர்த்திசெய்து திம்புலாகல, வெலிகந்த, லங்காபுர, மெதிரிகிரிய ஆகிய பிரதேச சபை பிரதேசதங்களில் நீர்

இணைப்புக்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்தது. எனினும், திட்டமிடல் கட்டத்தில் செயற்திறனின்மை மற்றும் ஆக்கபூர்வமின்மை மற்றும் செயற்திட்ட நடவடிக்கைகளில் உத்தியோகத்தர்கள் ஈடுபட்டிருந்தமை என்பவற்றின் காரணமாக இலக்குகளை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. 04 பிரதேச சபைப் பிரதேசங்களில் அமுல்படுத்தப்பட்ட 28 திட்டங்களுக்கான உள்ளபடியான அடைந்துகொள்ளலானது இலக்குகளின் 42.8 சதவீதமாக இருந்தது. (பின்னிணைப்பு 04 ஐப் பார்க்கவும்)

**வெளிப்பாடுகள்**

---------------------------

குறைந்த மட்ட செயற்திறனும் செயற்திறனின்மையும் அலகுக் கிரயத்தில் அதிகரிப்பிற்கும் கூடுதலான மூலதன முதலீட்டிற்கும் இட்டுச் செல்லும்.

**சிபார்சுகள்**

---------------

செயற்திட்டங்களின் செயல்முன்னேற்றத்தினை ஒழுங்கான அடிப்படையில் பேணப்பட வேண்டிய, அதேவேளை செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு முன்னர் இலக்கிடப்பட்ட குழுவின் உள்ளபடியான தேவைகள் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும் என்பது சிபார்சு செய்யப்படுகின்றது.

**முகவராண்மை பதில் வாசகம்**

-----------------------------------------------

கிராம சேவகர் பிரிவிலுள்ள குடும்பங்களின் மொத்த எண்ணிக்கையை கருத்திற் கொண்டு குறித்த ஒரு கிராம சேவகர் பிரிவிற்கான நீர் வழங்கல் திட்டம் வடிவமைக்கப்படுகின்றது. பொதுவாக ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து முழுமையான உள்ளடக்கத்தை அடைந்து கொள்வதில் கால தாமதம் காணப்பட்டது.

பின்னிணைப்பு 04 இல் குறிப்பிடப்பட்ட 06 நீர் வழங்கல் திட்டங்களானவை இக்கணக்காய்வு அறிக்கையைத் தயாரிக்கும் சமயத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஏனைய திட்டங்களில் அச்சமயத்தில் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையான நீர் இணைப்புக்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தும் தற்பொழுது (2013 மார்ச் 31 இல்) பின்னிணைப்பு 04 இல் குறிப்பிட்ட திட்டங்களிலுள்ள நீர் இணைப்புக்களின் திரண்ட எண்ணிக்கை 4525 ஆக இருந்தது.

### 3.7 சாதகமான வருமானமற்ற நீர் வரிகள்

---------------------------------------------------

**அவதானிப்புக்கள்**

------------------------------

வருமானமற்ற நீரைக் குறைப்பதற்கு சட்டரீதியற்ற நீர் இணைப்புக்களையும் நீர்க்கசிவுகளையும் குறைத்தலே நாட்டிலுள்ள நீர்த் துறையின் பிரதான குறிக்கோள்களில் ஒன்றாகும். எவ்வாறாயினும் செயற்திட்டத்தின் வருமானமற்ற நீரானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் வருமானமற்ற நீரினைவிடக் குறைந்ததாகும். பொலனறுவை மாவட்டத்திலுள்ள 09 செயற்திட்டங்களின் வருமானமற்ற நீரின் சதவீமானது

1.6 சதவீதத்திலிருந்து 16.2 சதவீதம் வரையிலான வீச்சுடையதாகக் காணப்பட்ட போதிலும் பொலனறுவை மாவட்டத்தில் தேசிய நீர் வளங்கள் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் வருமானமற்ற நீர் 17.5 சதவீதமாக இருந்தது.

**வெளிப்பாடுகள்**

-------------------------

வருமானமற்ற நீர் தொடர்பாக செயற்திட்டத்தின் பயனுறுதி மற்றும் செயற்திறனின் காரணமாக அலகுக் கிரயம் குறையலாம். இது சமூக நீர்வழங்கல் திட்டங்களின் சிக்கனத்தை அதிகரிக்கும். அத்துடன் இது சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் நிலைத்திருக்கும் தன்மையினை மேம்படுத்தும்.

**சிபார்சுகள்**

-------------------

வருமானமற்ற நீரை ஆகக்குறைந்த மட்டத்திற்கு மேலும் குறைப்பதற்கும் அந்த மட்டத்தில் பேணுவதற்கும் தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு சிபார்சு செய்யப்படுகின்றது.

**முகவராண்மை பதில்வாசகம்**

-------------------------------------------------

முகவராண்மை பதில் வாசகம் வழங்கப்படவில்லை.

## 3.8 செயற்திட்ட முகாமைத்துவம்

-------------------------------------------------

**அவதானிப்புகள்**

---------------------------

சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் செயற்திறனான செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக செயற்திட்ட முகாமைத்துவ அலகு சிறந்த தாபன கட்டமைப்பினை அபிவிருத்தி செய்யவேண்டியுள்ளது. உத்தியோகத்தர்கள் மற்றும் கிராமத்தவர்களுடனான நேர்காணலின் அடிப்படையில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

அ. சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்கு உரிய உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

ஆ. நிதிக் கட்டுப்பாட்டு முறைமைகள் முறையாக அறிமுகப்படுத்தப்படவில்லை.

இ. வருடாந்தம் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

ஈ. தொழில்நுட்ப அம்சங்கள் அலட்சியப்படுத்தப்பட்டன.

உ. அனுபவமான உத்தியோகத்தர்களைப் பதிலீடு செய்யும் வகையில் சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்கான புதிய ஆட்சேர்ப்புக்களுக்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களானது போதியவையாக இல்லாததுடன் முறைப்படியாக நடாத்தப்படவில்லை.

ஊ. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, செயற்திட்ட முகாமைத்துவ அலகு, பிரதேச சபை முதலியவாறான உரிய அதிகாரிகளால் சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யாமை.

**வெளிப்பாடுகள்**

---------------------------

ஒழுங்குபடுத்தப்படாத நிலைமை திட்டங்களின் நீண்டகாலத் தன்மையினை பாரதூரமாகப் பாதிக்கலாம்.

**சிபார்சுகள்**

--------------------

பின்வரும் சிபார்சுகள் செய்யப்படுகின்றன.

அ. சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் வேலைகளை ஒழுங்காக மேற்பார்வை செய்வதற்காக ஏற்பாடு செய்தல்.

ஆ. பொருத்தமான மற்றும் அர்ப்பணிப்புள்ள உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதனை உறுதிப்படுத்துவதற்காக சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் உத்தியோகத்தர்களைத் தெரிவுசெய்தல் நடைமுறையினை மீள ஒழுங்குபடுத்துதல்.

இ. வருடாந்த நிதிக்கூற்றுக்களைக் கணக்காய்வு செய்வதற்கான நிதிசார் நடைமுறைகளை அறிமுகப்படுத்துதலும் அமுல்படுத்துதலும்.

**முகவராண்மை பதில்வாசகம்**

---------------------------------------------

அ. சமூகத்தினால் பங்குபற்றுதல் பிரதிநிதித்துவ தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

ஆ. சம்பந்தப்பட்ட சீபீஓ உத்தியோகத்தர்களுக்கு பின்வரும் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

(i) ஏடுகளைப் பேணுதல் தொடர்பான இரண்டு நாட்கள் பயிற்சி

(ii) நிர்மாணக் கட்டத்தில் நிதி முகாமைத்துவம் தொடர்பான இரண்டு நாட்கள் பயிற்சி

ஏடுகளைப் பேணுவதில் பங்காளி அமைப்புக்களின் உத்தியோகத்தர்களும் அத்துடன் சீபீஓ உத்தியோகத்தர்களும் உதவியளிக்கப்பட்டனர். சீபீஓ இன் கணக்குகள் மாவட்ட கணக்காளரால் காலத்துக்கு காலம் பரீட்சிக்கப்பட்டதுடன் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இ. செயற்திட்ட காலப் பகுதியில் கணக்குகள் கணக்காய்வு செய்யப்பட்டன. அதன் பின்னர் சமூக அடிப்படையிலான அமைப்புக்கள் வருடாந்தம் கணக்காய்வினை நடாத்துகின்றன.

ஈ. தொழில்நுட்ப அம்சங்கள் கலந்தாலோசிக்கப்பட்டு தீர்த்துவைக்கப்பட்டன. நடைமுறைத் தாமதத்தின் காரணமாக தொழில்நுட்ப அம்சங்களைக் கலந்தாலோசிப்பதிலான தாமத சந்தர்ப்பங்கள் காணப்பட்டிருக்கலாம்.

உ. செயற்திட்ட திட்டமிடல், நிர்மாணம், செயற்பாடும் பராமரிப்பும் என்பவற்றிற்காக வேண்டப்பட்ட பயிற்சியானது செயற்திட்டத்தின் உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிப்பதன் மூலம் சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டது.

ஊ. அனுராதபுரம் மற்றும் பொலனறுவை மாவட்டங்களிலுள்ள 225 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் 4 ஆவது செயற்திட்டத்தின் கீழ் கிராமிய நீர் வழங்கல் மற்றும் சுகாதார வேலைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன. அனுராதபுரம், பொலனறுவை ஆகிய இரண்டு மாவட்டங்களிலுள்ள செயற்திட்ட முகாமைத்துவ அலகு பதவியணியினர், பிரதம பொறியியலாளரை தலைவராகக் கொண்ட செயற்திட்ட அமுலாக்கல் அலகு பதவியணியினர், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பொறியியலாளர்கள், பங்காளி அமைப்புக்களின் பதவியணியினருடன் சேர்த்து ஏழு (07) செயற்திட்ட ஆதரவு அமுலாக்கல் அலகிலுள்ள ஈஏஎஸ் மற்றும் சீடீஓ க்கள் ஆகியோரை மேற்பார்வை ஒழுங்குகள் உள்ளடக்கியிருந்தது.

## 04. கணக்காய்வு முடிவுகள்

---------------------------------------

செயற்திட்டத்தின் அமுலாக்கல் மற்றும் சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் செயற்திறனுடன் போதியளவு நீர் கிடைக்கப்பெறுகின்றதா என்பதனையும் குடிநீரின் தரம் திருப்தியாக உள்ளதா என்பதனையும் அப்படியாயின் பயனுறுதி, செயற்திறன், சிக்கனம் மற்றும் சுற்றாடல் சிநேக அணுகுமுறையினை மேம்படுத்துவதற்கு மிகுதியாகவுள்ள செயற்திட்ட காலத்தின் போது எவ்வாறான மாற்றங்கள் தேவைப்படுகின்றது என்பதனையும் நிர்ணயிப்பதற்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் கணக்காய்வினை கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களம் பொறுப்பேற்றது. விசேடமாக பின்வருவனவற்றை நாங்கள் கண்டுகொண்டோம்.

அ. நீர் எதிர்பார்க்கப்பட்ட அளவில் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தமையானது செயற்திட்ட திட்டமிடலின் செயற்திறனின்மையினைக் காட்டுகின்றதுடன் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் செயற்திட்டத்தின் நிலைத்திருத்தல் மீது சந்தேகத்தினை உருவாக்கியுள்ளது.

ஆ. நீரின் தரமானது வேண்டப்பட்ட நியமங்களுடன் ஒத்திருக்கவில்லை. ஆகவே பலவீனமான முகாமைத்துவத்தின் காரணமாக மனித உயிர்களுக்கு ஆபத்து ஏற்படும் சாத்தியம் மிகவும் உயர்வாக உள்ளது.

இ. ஒரு பிரதான நீர்த்திட்டம் கைவிடப்பட்டதனால் இந்த சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்க அளவான முதலீட்டிலிருந்து தேறுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நலன்களும் சமூக அடிப்படையிலான அமைப்புக்களுடன் ஈடுபட்ட இணைந்த கிரயமும் இழக்கப்பட்டிருந்தது.

ஈ. செயற்திட்டத்திற்கு மேலும் சிக்கனமற்ற தாக்கத்தினைச் சேர்ப்பதன் மூலம் பல செயற்திட்டங்கள் தொடர்பாக மேலதிகக் கிரயங்கள் ஏற்பட்டுள்ளன.

உ. சுத்திகரிக்கப்படாத நீரை மக்களுக்கு வழங்கியமையானது மக்கள் மத்தியில் நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை பற்றி தவறான அபிப்பிராயத்தினை ஏற்படுத்தியுள்ளது.

ஊ. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மீது உரிய அதிகாரிகளினால் போதிய வழிகாட்டல்கள் மற்றும் மேற்பார்வை இல்லாமை

எ. பல சந்தர்ப்பங்களில் சமூக அடிப்படையிலான அமைப்புக்களைச் செயற்படுத்துவதற்கு போதிய உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாதிருந்தது. ஆகவே சமூகத்திற்கு நீண்டகாலத்திற்கு நலன்களை வழங்குதல் ஐயத்திற்குரியதாக இருந்தது.

ஏ. மேலும் பலமான சமூக அடிப்படையிலான அமைப்புக்கள் காணப்படாமை நிதி மற்றும் நிர்வாகச் செயற்பாடுகள் தொடர்பாக போதியளவில் ஏடுகள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை, நிதிக் கட்டுப்பாட்டு முறைகள் அமுல்படுத்தப்படாமை, தொழில்நுட்ப அம்சங்கள் மீது அக்கறை செலுத்தாமை என்பன செயற்திட்டத்தின் பயனுறுதி, செயற்திறன், சிக்கனம் என்பவற்றைப் பாதிக்கும்.

ஐ. நீர்த்திட்டங்களின் குறைபாடான ஆரம்பத் திட்டமிடல் மற்றும் குறைபாடான சாத்தியவள ஆய்வுகள் என்பன செயற்திட்டத்தின் தற்போதைய அந்தஸ்தில் குறிப்பிடத்தக்க அளவு தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது.

ஒ. தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையுடன் ஒப்பிடுகையில் குறைந்த உற்பத்திக் கிரயமும் வருமானமற்ற நீரும் மாத்திரமே திட்டங்களின் சாதகமான அம்சங்களாகும்.

**பின்னிணைப்பு – அ – கணக்காய்வு பருமனளவு**

--------------------------------------------------------------------

| | குறிக்கோள்கள் | கணக்காய்வு பருமனளவு |
|---|---|---|
| 01 | எதிர்பார்க்கப்பட்டவாறு நீர்வழங்கலானது போதியவையாக இருந்தது என்பதனையும் சம்பந்தப்பட்ட பிரதேசத்திற்குள் தரவேண்டுதல்கள் நிறைவேற்றப்பட்டிருந்தன என்பதனையும் மதிப்பீடு செய்தல் | • குடிநீர் வழங்கல் தொடர்பான தேசிய நீர்க்கொள்கை<br>• எதிர்பார்க்கப்பட்ட வேண்டுதல் - உள்ளபடியாக அடையப்பட்டதுடன் ஒப்பிடுகையில் குழாய் வழியிலான நீர் இணைப்புக்களின் எண்ணிக்கை (சாத்திவள ஆய்வு அறிக்கை)<br>• நீர்த்தர அறிக்கைகளின்படி வேண்டப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட தரத்தில் நிறைவேற்றப்படும் நீரின் தரம் |
| 02. | குறைந்த கிரயத்தில் துப்பரவான குடி நீரினைத் தயாரிப்பதனையும் பாவனையாளர்களுக்கு நீரினை வழங்குவதனையும் சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் கட்டமைப்பு சாத்தியமாக்கியுள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு | • பின்வருவனவற்றுடனான கிரய ஒப்பீடு<br>▪ என் டபிள்யூ எஸ் டீ பீ பிராந்தியம்<br>▪ மாவட்ட சீபீஓ<br>• என் ஆர் டபிள்யூ<br>• ஏனைய சீபீஓக்களுடன் ஒப்பிடப்பட்ட வரி |
| 03. | தயாரிப்பதற்குத் திட்டமிடப்பட்ட துப்பரவான நீரின் அளவானது சம்பந்தப்பட்ட சமூகத்தின் எதிர்காலத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு போதியவையாக இருக்குமா என்பதனை மதிப்பீடு செய்வதற்கு | • சாத்தியவள ஆய்வு அறிக்கை<br>• குறித்த காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட நீர் மூலவளங்களின் இயலளவு<br>• நீர்த் தாங்கிகளின் எதிர்பார்க்கப்பட்ட எண்ணிக்கையும் விநியோக முறைமையின் இயலளவும்<br>• ஆய்வுகளிலிருந்து நலன் பெறுனர்களின் எதிர்பார்ப்பு |
| 04. | தற்போதுள்ள கட்டுப்பாடுகள், நடைமுறைகள், ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பு என்பவற்றிற்குள் சமூகத்திற்கான நீர் விநியோகத்தினை தொடர்வது தொடர்பாக சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் நிலைத்திருத்தல் தன்மையினை நிர்ணயிப்பதற்கு | • தேசிய நீர் வளங்கள் மற்றும் வடிகாலமைப்புச் சபை பிரதேச சபையுடனான புரிந்துணர்வு உடன்படிக்கையின் நிபந்தனைகள்<br>• எதிர்பார்க்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளும் நிர்வாக நடைமுறைகளும்.<br>• எதிர்பார்க்கப்பட்ட அறிக்கையிடல் படிவமும் அறிக்கையிடலும்<br>• எதிர்பார்க்கப்பட்ட செயல்முன்னேற்ற அறிக்கை (மாதாந்த மற்றும் கருத்தரங்கு)<br>• சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள். |
| 05. | சுற்றாடல் மற்றும் மக்கள் மீது சீபிஓ நீர்வழங்கல் திட்டங்களின் தாக்கத்தினை மதிப்பீடு செய்வதற்கு (சுற்றாடல் மற்றும் சமூகத்தாக்கம்) | • மக்களினால் திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட வெளிப்பாடு<br>• சுற்றாடல் நிலைத்திருத்தல் தன்மை தொடர்பான எதிர்பார்ப்பு |

**பின்னிணைப்பு – (ஆ)**

தொடர்பு ஆவணங்கள்

I. இலங்கை தேசிய நீர்க்கொள்கை
II. செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணம்
III. செயற்திட்ட கடன் உடன்படிக்கை கடன் இலக்கம் - 1993
IV. செயற்திட்டத்தின் செயல்முன்னேற்ற அறிக்கை

**குறைந்த பலாபலனின் காரணமாக வெற்றியளிக்காத செயற்திட்டம்**

---

**பின்னிணைப்பு - 01**

| **பிரதேச சபைப் பிரிவு** | **அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை** | **மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை** | **குறைந்த பெறுபேற்றின் காரணமாக வெற்றியளிக்காத செயற்திட்டங்களின் எண்ணிக்கை** | **வெற்றியளிக்காத செயற்திட்டங்களின் சதவீதம் %** |
|---|---|---|---|---|
| திம்புலாகல | 11 | 08 | 06 | |
| வெலிகந்த | 07 | 04 | 04 | |
| மெதிரிகிரிய | 04 | 04 | 01 | |
| லங்காபுர | 06 | 04 | 00 | |
| | 28 | 20 | 11 * | 55 |

* **பின்னிணைப்பு**

| **பிரதேச செயலாளர் பிரிவு** | | **திட்டம்** |
|---|---|---|
| திம்புலாகல | (i) | ரத்மல்தென்ன |
| | (ii) | மேற்கு பிம்புரத்தேவ |
| | (iii) | நிதன்வெல |
| | (iv) | இஹல எல்லவெவ |
| | (v) | வீரலந்த |
| | (vi) | கெகுலவெல |
| வெலிகந்த | (i) | நெலும்வெவ |
| | (ii) | போட்டா |
| | (iii) | மெனிக்வெல |
| | (iv) | பொரவெவ |
| மெதிரிகிரிய | (i) | மன்டலகிரிய |

**குறைந்த தரத்தின் காரணமாக வெற்றியளிக்காத செயற்திட்டம்**

---

**பின்னிணைப்பு - 02**

| பிரதேச சபைப் பிரிவு | அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை | மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை | குறைந்த பெறுபேற்றின் காரணமாக வெற்றியளிக்காத செயற்திட்டங்களின் எண்ணிக்கை | வெற்றியளிக்காத செயற்திட்டங்களின் சதவீதம் % |
|---|---|---|---|---|
| திம்புலாகல | 11 | 08 | 03 | |
| வெலிகந்த | 07 | 04 | 04 | |
| மெதிரிகிரிய | 04 | 04 | 02 | |
| லங்காபுர | 06 | 04 | 00 | |
| | 28 | 20 | 9 * | 45 |

* **பின்னிணைப்பு**

| **பிரதேச செயலாளர் பிரிவு** | | **திட்டம்** |
|---|---|---|
| திம்புலாகல | (i) | ரத்மல்தென்ன |
| | (ii) | மேற்கு பிம்புரத்தேவ |
| | (iii) | இஹல எல்லவெவ |
| வெலிகந்த | (i) | நெலும்வெவ |
| | (ii) | போட்டா |
| | (iii) | மெனிக்வெல |
| | (iv) | பொரவெவ |
| மெதிரிகிரிய | (i) | மன்டலகிரிய |
| | (ii) | குசும்பெலக்குன |

**<u>சுத்திகரிக்கப்பட்ட நீர் வரிகளின் முரண்கள்</u>**

**பின்னிணைப்பு – 03**

| செயற்திட்டம் | | அலகு கிரயம் ரூபா | நிலையான கட்டணம் ரூபா |
|---|---|---|---|
| வீரலந்ந | | 10.00 | 50 |
| முனிசிரிகம | | 10.00 | 70 |
| வெலி எல | 1-10 | 12.00 | |
| | 11-25 | 15.00 | 60 |
| | 16-25 | 20.00 | |
| | >25 | 25.00 | |
| பனசல்கொடல்ல | 1-10 | 8.00 | 50 |
| | >10 | 12.00 | |
| பல்பொத | 1-10 | 10.00 | |
| | 10-20 | 20.00 | |
| | 20-30 | 30.00 | |
| | 30-40 | 40.00 | |
| பொரவெவ | 1-10 | 5.00 | |
| | 11-15 | 10.00 | 50 |
| | 16-20 | 15.00 | |
| | >20 | 20.00 | |
| நெலும்வெவ | 1-5 | 12.50 | |
| | 6-10 | 15.00 | 50 |
| | 11-15 | 17.50 | |
| மெனிக்வெல | 0-10 | 10.00 | |
| | 11-15 | 15.00 | 50 |
| | >15 | 20.00 | |

**நீர்ச் சபை**

| | அலகு கிரயம் ரூபா | நிலையான கட்டணம் ரூபா |
|---|---|---|
| 0-5 | 3 | 50 |
| 6-10 | 7 | 65 |
| 11-15 | 15 | 70 |
| 16-20 | 30 | 80 |
| 21-25 | 50 | 100 |
| 26-30 | 75 | 200 |
| 31-40 | 90 | 400 |
| 41-50 | 105 | 850 |
| 51-75 | 110 | 1,000 |
| >75 | 120 | 1,600 |

**பின்னிணைப்பு – 04**

| | | பிரதேச சபைப் பிரிவு | எதிர்பார்க்கப்பட்ட நலன்பெறுனர்களின் எண்ணிக்கை | உள்ளபடியான நலன்பெறுனர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | திம்புலாகல | | | |
| | 1. | விஜயப்புர | 300 | 181 |
| | 2. | ரத்மல்தென்ன | 150 | 115 |
| | 3. | மேற்கு பிம்புரத்தேவ | 157 | 73 |
| | 4. | நிடன்வல | 140 | 94 |
| | 5. | இஹலவெவ | 274 | 215 |
| | 6. | உல்பத்வெவ | 156 | 71 |
| | 7. | இஹலஎல்லேவெவ | 332 | 316 |
| | 8. | வீரலந்த | 197 | 135 |
| | 9. | சந்தகலடதென்ன | 171 | 00 |
| | 10. | கன்டேகம | 300 | 00 |
| | 11. | கெகுலவெல | 264 | 00 |
| 2. | வெலிகந்த | | | |
| | 1. | நெலும்வெவ | 210 | 147 |
| | 2. | மகுல்பொகுள | 180 | 18 |
| | 3. | போட்ட | 175 | 92 |
| | 4. | மெனிக்வெல | 206 | 51 |
| | 5. | பொரவெவ | 170 | 90 |
| | 6. | மொதுகல | 169 | 00 |
| | 7. | செவனபிடிய | 53 | 53 |
| 3. | லங்காபுர | | | |
| | 1. | முமிசிரிகம | 476 | 200 |
| | 2. | பன்சல் கொடெல்ல | 30 | 201 |
| | 3. | படுனுமக | 272 | 124 |
| | 4. | டல்பொத | 202 | 157 |
| | 5. | டம்பல | 580 | 00 |
| | 6. | வெலி எல | 496 | 170 |
| 4. | மெதிரிகிரிய | | | |
| | 1. | குசும்பொக்குன | 319 | 237 |
| | 2. | மண்டலகிரி | 200 | 176 |
| | 3. | டெம்பாஓயா | 225 | 126 |
| | 4. | உடகன்னாவ | 422 | 00 |
| | | மொத்தம் | 7097 | 3042 |